**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.37/2021 – DW-2**

| | |
|---|---|
| Name | திரு.லோகேஷ் |
| Father Name | திரு.லோகநாதன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **09.03.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

வழக்கின் சங்கதிகள் எனக்கு தெரியும். என் தகப்பனாரும், பின்னர் நானும் பல தொழில்கள் செய்து வந்தோம் என்றாலும், தற்போது நான் உணவகம் நடத்தி வருகிறேன் என்றாலும் சரிதான். நீதிமன்ற வழக்கு நடைமுறைகள் எனக்கு தெரியும். என் உணவகம் சம்மந்தமாக வேலூர் மற்றும் சென்னை நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். வாதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பிய பிறகு நானும், என் அம்மாவும் எங்கள் வழக்கறிஞரை பார்த்து விவரங்கள் சொன்னோம். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 3–வது பத்தியில் சொல்லியுள்ள விவரங்களை பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பிலோ, பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ மற்றும் பிரதிவாதியின் நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவற்றில் சொல்லப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. அந்த விவரங்களை என் வழக்கறிஞரிடம் சொல்லியிருந்தேன். வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் என் தாயார் HDB வங்கியில் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் அந்த கடனை பெற்றதில் நான் இணை கடனாளியாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய கடனுக்கு என் தாயார் அவரது சொத்தை வங்கிக்கு அடமானம் கொடுத்தார். அந்த மாதிரியான வாசகம் வா.சா.ஆ.5 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணம் தான் வா.சா.ஆ.5–ல் கண்ட கடனை முடித்துக் கொண்டதற்குரிய ஆவணம் என்றால் சரிதான். வழக்கை திசை திருப்ப வேண்டும் என்பதற்காக சமீபத்தில் பி.சா.ஆ.4 ஆவணத்தை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை வாதிக்கு விற்பனை ஒப்புக்கொண்டு 03.02.2021–ம் தேதி விக்கிரைய ஒப்பந்தப்பத்திரம் பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நானும், என் அம்மாவும் தவறான சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள படி அவருக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என்னை காவல் நிலையத்தில் அமர வைத்து என் அம்மாவை மிரட்டி கையெழுத்து வாங்கியதாக

நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது சம்மந்தமாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. நான் சொன்னது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.